### வடமாநிலங்களில் இருந்து திருப்பூருக்கு

# ரயிலில் கடத்தி வரும் போதைப் பொருட்கள்!

## கட்டுப்படுத்த தவறிய காவல்துறையினர்!

திருப்பூர், ஜூன் 21-

திருப்பூருக்கு வட மாநிலத்தவர்கள் ரயில் மூலம் கஞ்சா, புகையிலை கடத்தி வருவதை காவல்துறையினர் கட்டுப்படுத்த தவறியுள்ளனர்.

தொழில் நகரமான திருப்பூர் பகுதியில் பின்னலாடை நிறுவனங்களில் பணியாற்ற பல்வேறு மாவட்டங்களிலிருந்து தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். அது மட்டுமல்லாமல்

வெளி மாநிலங்களான அசாம், ஒடிசா, பீகார், உத்தரபிரதேசம் உள்ளிட்ட பல மாநிலங்களிலிருந்து தொழிலாளர்கள் திருப்பூரில் பல்வேறு பகுதிகளில் பரவலாக பனியன் நிறுவனங்களில் பணியாற்றி வருகின்றனர்.

தினமும் வட மாநிலங்களில் இருந்து திருப்பூருக்கு வரும் ரயில்களில் பான் மசாலா மற்றும் கஞ்சாவை கடத்தி வந்து திருப்பூரில் விற்பனை செய்து வருகின்றனர். பனியன் நிறு வனத்திற்கு வேலைக்கு செல்லும் தொழிலாளி அந்த வருமானம் போக தினமும் ரூ.2 ஆயிரம் வரையிலும் புகையிலை, கஞ்சா விற்று பணம் சம்பாதித்து வருகிறார்கள். எனவே கஞ்சா, குட்கா கடத்தல் காரர்கள் மீது காவல்துறையினர் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

### கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் குறை தீர்க்கும் முகாமில்

# பொதுமக்களிடம் வாங்கிய 3,000 புகார் மனுக்கள் நிலுவை!

## மீண்டும் புகார் தர வருவோர் எண்ணிக்கை அதிகரிப்பு!

கோவை, ஜூன் 21-

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வாரந்தோறும் திங்கட்கிழமை மக்கள் குறை தீர்ப்பு கூட்டம் நடைபெறுகிறது. ஒவ்வொரு குறை தீர்ப்பு கூட்டத்திலும் 350 முதல் 450 புகார் மனுக்கள் பெறப்பட்டு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. 15 முதல் 30 நாளில் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டும் எந்த தீர்வும் கிடைக்காமல் மீண்டும் புகார் தர வருவோர் எண்ணிக்கை அதிகமாகி விட்டது.

மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் பரிந்துரை செய்து தீர்வு காண வலியுறுத்தி அனுப்பி வைத்த மனுக்கள் மீண்டும் குறை தீர்ப்பு கூட்டத்திற்கு வருகிறது. இதை பார்த்து அதிகாரிகள் கடுப்பாகி போனாலும் இது வாடிக்கைதான் என விட்டு விடுகின்றனர். விரக்தியின் உச்சத்தில் மனுதாரர்கள் தற்கொலை முயற்சிக்கு செல்லும் விபரீதமும் மாவட்ட ஆட்சியர் ]அலுவலக வளாகத்தில் அவ்வப்போது நடக்கிறது.

காவல்துறையினர் தற்கொலை செய்பவர்களை தடுக்க தீவிர சோதனை செய்கிறார்கள். வாட்டர் பாட்டிலை திறந்து அதில் உள்ள தண்ணீரை குடிக்க வைத்து 'பெட்ரோல்' இல்லை என உறுதி செய்து அனுப்பி வைக்கும் அவலம் இருக்கிறது. அதையும் மீறி யாராவது தற்கொலைக்கு முயன்றால் "இங்கே எதுவும் செய்யக்கூடாது" என எச்சரித்து அனுப்புவது நடக்கிறது. தீர்வு கிடைக்காத அவலத்தின் உச்சமே தற்கொலை முயற்சி என்பதை அனைத்துதுறை அதிகாரிகளும் உணர்ந்துள்ளனர். ஆனாலும் கீழ்மட்ட அலுவலர்களை வேலை வாங்கி தீர்வு காண்பதில்லை. தங்களது டேபிளுக்கு பிரச்சினைக்குரிய விண்ணப்பங்கள் வராமல் பார்ப்பதிலும் உயர் அதிகாரிகள் கவனமாக இருக்கிறார்கள், இதனால் மனுவுக்கு நீதி கிடைக்காமல் இருப்பதால் புகார்தாரர்கள் புலம்புகின்றனர்.

வட்ட அளவில் பிரச்னைகளை தீர்க்க வேண்டிய அதிகாரிகள் குறிப்பாக கிராம நிர்வாக அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள், தாசில்தார்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், சமூக பாதுகாப்பு திட்டத்தினர், மின் வாரியம், பஞ்சாயத்து நிர்வாகம் போன்ற பல்வேறு துறையினர் அலட்சியப் படுத்துவதால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புகார்தாரர்கள் வந்து குவிவதாக கூறப்படுகிறது. அந்த மனுக்கள் திரும்பவும் அந்தந்த அதிகாரிகளுக்கு சென்ற போதும் தீர்வு கிடைக்காத நிலையில் விரக்தியால் புகார்தாரர்கள் பலர் விட்டு விடுகின்றனர். அரசாங்கத்தின் உதவி கிடைக்காத உண்மையான பயனாளிகள் ஏமாற்றப்பட்டு விரக்தியில் கதறும் பரிதாப நிலைமை தொடர்கிறது. மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் குறை தீர்ப்பு முகாமில் பொதுமக்களை வழிநடத்த யாருமில்லை, வளாகத்திற்கு வெளியே விண்ணப்பங்கள் விற்பவர்கள் பணம் தந்தால் புகார் மனுக்களை எழுதிதருகிறார்கள். விண்ணப்பங்களும் விற்பனை செய்யப்படுகிறது. புகார் மனுக்களை குறை தீர்க்கும் பிரிவில் பதிவு செய்து அதிகாரிகளிடம் அனுப்புகிறார்கள். ஆனால் உரிய அதிகாரிகள் முகாமிற்கு வருவதில்லை. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் சில அதிகாரிகளும், தாலுகா அலுவலக அதிகாரிகள் சிலர் மட்டுமே முகாமிற்கு வருகிறார்கள். உயரதிகாரிகள் பெரும்பாலும் முகாமிற்கு வருவதில்லை. பெயரளவிற்கு நடத்தப்படும் இந்த முகாமில் 70 சதவீதத்திற்கும் மேற்பட்ட புகார்கள் தீர்வு கிடைக்காத நிலையில் இருக்கிறது.

இதுவரை சுமார் 3 ஆயிரம் கோரிக்கை மனுக்கள் கிடப்பில் இருக்கிறது. இலவச மனை பட்டா, இலவச வீடு, முதியோர் உதவித் தொகை, மகளிர் உரிமை தொகை, மாற்று திறனாளிகள் உதவி திட்டங்கள் தொடர்பான பெரும்பாலான மனுக்கள் முடங்கி போய்விட்டது. காவல் துறை சம்பந்தப்பட்ட உதவிக்கான மனுக்களை மாவட்ட நிர்வாகத்தி னர் கண்டு கொள்வதில்லை. மாநகர், மாவட்ட காவல் துறை அதிகாரிகள் குறை தீர்ப்பு கூட்டத்திற்கு வருவது மில்லை. சட்டம் ஒழுங்கு, இடம், பண விவகாரம் தொடர்பான பிரச்னையால் தற்கொலைக்கு முயற்சிக்கிறார்கள். இதை தவிர்க்க தேவையான முயற்சியை எடுக்கவில்லை. குறைதீர்ப்பு முகாம் மனுக்களும் தீர்வு கிடைக்க உயரதிகாரிகள் தீவிரம் காட்ட வேண்டும் என ஏழை, எளிய மக்கள் எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள்.

சமூக பாதுகாப்பு திட்டத்தினர் கூறுகையில், சிஎம் செல்லுக்கு புகார் மனுக்கள் போகிறது. எந்த துறையில் எவ்வளவு விண்ணப்பங்கள் என வெளியே சொல்ல கூடாது என உத்தரவு போட்டு விட்டார்கள். தீர்வு காணும் விண்ண ப்பங்கள் எங்களுக்கு வராது. நாங்கள் வரும் விண்ணப்பங்களை அந்தந்த துறைக்கு பிரித்து அனுப்புவோம். ஏன் தீர்வு காணவில்லை என அந்தந்த துறை அலுவலர்கள் தான் சொல்ல வேண்டும். 80க்கும் மேற்பட்ட அரசு துறைகள் இருக்கிறது. இரண்டாவது முறையாக தரும் பெட்டிசன்கள் புதிதாக தான் பதிவாகும் என்றனர்.

### கோவை கோவில்மேடு பகுதியில்

# டாஸ்மாக் பார் கதவை உடைத்து பார் உரிமையாளர் மிரட்டல்!

## 3 வாலிபர்கள் கைது!

கோவை, ஜூன் 21-

கோவையில் டாஸ்மாக் பார் கதவை உடைத்து மது, பணம் கேட்டு பார் உரிமையாளரிடம் கத்தி முனையில் மிரட்டிய வாலிபர்கள் 3 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

கோவை இடையர்பாளையம், அன்பு நகர், 2வது வீதியைச் சேர்ந்தவர் கவின் யாதவ் (39), இவர் கோவில் மேடு பகுதியில் டாஸ்மாக் பார் நடத்தி வருகிறார். நேற்று முன்தினம் காலை 3 பேர் பாரை திறக்கும்படி கூறியுள்ளனர். அதற்கு கவின் யாதவ் பார் மதியம் 12 மணிக்கு மேல் தான் திறக்கப்படும், இப்போது திறக்க முடியாது" என்று தெரிவித்துள்ளார். இதனால் ஆத்திரம் அடைந்த அவர்கள் பார் கதவை உடைத்தனர்.

பின்னர் அதில் ஒரு வாலிபர், தான் மறைத்து வைத்திருந்த கத்தியைக் காட்டி கவின் யாதவை மிரட்டியுள்ளார்.

மேலும் தகாத வார்த்தைகளால் திட்டி, பணம் மற்றும் மதுபாட்டில்களை கேட்டுள்ளார். அவரது அலறல் சத்தம் கேட்டு, அந்தப் பகுதியில் இருந்த பொதுமக்கள் மற்றும் அக்கம் பக்கத்தினர் ஓடிவந்தனர்.

பொதுமக்கள் வருவதை பார்த்து அந்த 3 பேரும் அங்கிருந்து தப்பி சென்றனர்.

இதுகுறித்து கவின் யாதவ் அளித்த புகாரின் பேரில் சாய்பாபா காலனி காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து பார் உரிமையாளரை மிரட்டிய கவுண்டம்பாளையம், புளியமரஸ்டாப், ஆர்.எஸ்.நகரை சேர்ந்த அபிஷேக் (21), கோவை கொண்டசாமி நாயுடு வீதியைச் சேர்ந்த சந்தோஷ்குமார் (20), கவுண்டம்பாளையம் மாரியம்மன் கோயில் வீதியைச் சேர்ந்த மதன் (எ) பக்கிரி மதன் (32) ஆகிய 3 பேரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கடையநல்லூர் கு.இராஜாமணி
### ஜூன் 21 (2009)



**தனது இளம் வயதிலேயே திராவிடர் கழகத்தில் ஈடுபாடு கொண்டு 1946ல் மதுரையில் நடைபெற்ற 'கறுப்புச் சட்டை மாநாட்டில்' பங்கேற்றவர். அதன்பின்னர் கழகத்தில் ஈடுபாடு கொண்டு கடையநல்லூர் நகர மாணவர் அணி அமைப்பாளராகவும், பின்னர் கடையநல்லூர் நகரக் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**


**நீதிகேட்டு நெடிய பயணத்தில் கலந்து கொண்டதுடன், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**"கடையநல்லூர் ராஜாமணி இன்று நேற்றல்ல, பல ஆண்டுகாலமாக கழக அரசின் சாதனைகளை சொந்த முயற்சியினால் துண்டு பிரசுரமாக அச்சடித்து மக்களிடம் வழங்கி பிரச்சாரம் செய்தவர்" என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### பெண்ணடிமை விலங்கினைத் தகர்த்த –

# பெண் உரிமைகளை போராடிப் பெற்ற போராளிகள் இயக்கம் தி.மு.க.!



**பொன். முத்துராமலிங்கம்,**
முன்னாள் அமைச்சர்,
உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர்

**ச**ங்ககால வாழ்வியல் முறைகளும், வள்ளுவரின் வாழ்க்கை நெறிகளையும் இரும்புத் திரையிட்டு மறைத்துவிட்டு வேதகால வாழ்க்கைமுறையை தமிழ்நாட்டில் ஆரியர்களால் பரவலாக்கப்பட்ட காரணத்தினால் தமிழர்களது உயர்ந்த நாகரிக வாழ்க்கை நெறி சிதறடிக்கப்பட்டு ஆரிய கலாச்சாரம் எல்லாத் துறைகளிலும் தலைதூக்கியமையால், பெண்கள் அடிமையாக்கப்பட்டார்கள்.

அவர்களது வாழ்க்கைமுறை சிதைந்து சின்னாபின்னமாக்கப்பட்டது. சுருக்கமாகச் சொன்னால் அவர்கள் முற்றிலும் உரிமையிழந்த போகப் பொருளாகத்தான் சமூகத்தில் கருதப்பட்டார்கள். பெண்கள், ஆண்களுக்கு என்றும் அடிமைதான். அவர்களுக்கென எந்த தனி உரிமையும் இல்லை என்ற இருண்ட காலத்தில் தான் தந்தைப் பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் என்கின்ற தமிழ்ப் பண்பாட்டுச் சிந்தனையாளர்கள், மகளிர் உரிமைகளுக்காக போராட்டக் களங்களை அமைத்து தமிழ்நாட்டில் நீண்டகால போராட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

இந்தப் பெண்ணுரிமைகளின் அடிப்படை நியாயங்கள் வாதங்கள் எழுத்துவடிவம் பெற்று தந்தைப் பெரியாரின் "குடியரசுப்" பத்திரிகையிலும், "விடுதலைப்" பத்திரிக்கையிலும், பேரறிஞர் அண்ணாவின் "திராவிட நாடு" "காஞ்சி" இதழ்களிலும், ஆங்கில இதழ்களான "Home land" "Home Rule" ஆகிய பத்திரிகைகளிலும் முத்தமிழறிஞர் கலைஞரின் மூத்த பிள்ளையான "முரசொலியிலும்" பெண்ணுரிமைகளுக்கான அடிப்படை நியாயங்களை உள்ளடக்கிய வாதப்பிரதிவாதங்களும், கட்டுரைகளும் பெருமளவில் இடம்பெற்றுள்ளது என்பதும் அதன்மூலம் தமிழ்நாட்டு மக்கள் விழிப்புணர்வு பெற்று பெண்ணடிமை என்கின்ற காட்டுமிராண்டித்தனமான பெண் ஒடுக்குமுறைகளுக்கும், கண் மூடி த்தனமான பழக்கவழக்கங்களுக்கும் எதிரான பல் வேறு போராட்டக் களங்களை தமிழ்நாட்டில் அமைத்தார்கள்.

இந்த தொடர் போராட்டங்களின் மூலம் ஓரளவு வெற்றியும் கண்டார்கள். இந்தப் போராட்டத்தின் ஒரு கட்டமாக 1938 ஆம் ஆண்டு இந்தித்திணிப்பை எதிர்த்து தந்தைப் பெரியார் நடத்திய அந்த நடைப்பயணப் போராட்டத்தில் திராவிட இயக்கத்தின் புரட்சிகரமான சிந்தனைகளுக்கு தங்களை ஈடுபடுத்திக் கொண்ட பெண்கள் பலர் இந்த போராட்டத்திலே கலந்து கொண்டார்கள் என்பது இன்றைய இருபால் இளைஞர்கள் அறிந்து கொள்ள வேண்டிய மிக முக்கியமான செய்தியாகும்.

இப்படி பல்வேறு போராட்டங்களைத் திராவிட இயக்கங்கள் ஒன்றிணைந்து தொடர்ந்து மேற்கொண்டதன் விளைவாகத்தான் 1967ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் பேரறிஞர் அண்ணா தலைமையில் ஆட்சி அமைந்தவுடன் மூன்று வரலாறு போற்றும் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

அவைகள்தான், சென்னை மாகாணம் தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்யப்படும். சுயமரியாதை திருமணங்கள் சட்டபூர்வமாக்கப்படும். இந்தித்திணிப்பை என்றும் எதிர்ப்போம். தமிழ்நாடு என்றும் தமிழ்,ஆங்கிலம் என்ற இரு மொழிக்கொள்கையைத்தான் பின்பற்றும் என்ற சட்டங்களாகும்!

இந்தச் சட்டங்களை வடிவமைத்தது பேரறிஞர் அண்ணா தலைமையில் உருவான திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதை இன்றைய இருபால் இளைஞர்களும் அறிந்து விழிப்புணர்வை பெற்றாக வேண்டும்.

சுயமரியாதை திருமணங்கள் சட்டஅங்கீகாரம் பெற்றது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் தான். இதன்பின்னர்தான், இயல்பாக மாலை மாற்றிக் கொண்டு மங்கல நாண் அணிவிக்கின்ற திருமண நிகழ்ச்சிகளும், மன ஒப்புதலோடு மாலை மாற்றிக் கொள்கின்ற திருமணங்களும் சட்ட அங்கீகாரம் பெற்றது என்பதை இன்றைய இருபால் இளைஞர்களுக்கு சுட்டிக்காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இந்தச் சட்டம் வருவதற்கு முன்பு எளிய முறையில் மாலை மாற்றி மங்கல நாண் அணிவிக்கும் திருமண நிகழ்ச்சிகள் சட்டப்படி செல்லத்தக்கவை அல்ல. மாறாக, அம்மி மிதித்து அருந்ததிப் பார்த்து ஆரிய புரோகிதர்களால் கன்னிகா தானம் செய்கின்ற திருமணங்கள்தான் சட்டப்படி செல்லத்தக்க திருமணங்களாகும். இந்த அவல நிலையைத் தகர்த்து தரைமட்டமாக்கிவிட்டு சுயமரியாதை திருமணங்களை சட்டபூர்வமாக்கிய புரட்சிகரமான இயக்கம் திராவிட முன்னேற்ற கழகம் என்பதை இருபால் இளைஞர் களும் புரிந்துகொள்ள வேண்டும். இந்தப் பயணம் முடிந்துவிடவில்லை மாறாக, ஒன்றியத்தில் சனாதன ஆட்சி தொடருமட்டும், இந்தப் பயணமும் தொடரும்!

1989 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைத்த பொழுது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெண்களுக்கு தங்களது பொதுக் குடும்ப பூர்வீகச்சொத்தில் ஆண்களுக்கு நிகரான சமபங்கு உண்டு என்பதை உறுதிசெய்யும் சட்டத்தை நிறைவேற்றினார்கள். அந்த சட்டமன்றக் கூட்டத்தில்தான் மாண்புமிகு முதலமைச்சர் முத்தமி ழறிஞர் கலைஞர் அவர்கள் தனக்கு இந்தச் சட்டம் கொண்டுவர வேண்டும் என்ற உந்துதல் ஏற்படுவதற்குக் காரணம் என்னுடைய தலைவர் தந்தை பெரியார் அவர்கள் 1929 ஆம் ஆண்டு செங்கல்பட்டிலே நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் பெண்களுக்கு தங்கள் குடும்ப பூர்வீகச்சொத்தில் ஆண்களுக்கு நிகரான சமபங்கு வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்.

எனவே, அந்தப் புரட்சிகரமான தீர்மானம்தான் இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு எனக்கு உந்துசக்தியாக இருந்தது எனக் குறிப்பிட்டார். இந்த உரிமைகளை முழுவீச்சில் பயன்படுத்திக் கொண்டிருக்கும் சம உரிமைப்பெற்ற பெண்களைக் கண்டு திராவிட முன்னேற்றக் கழகம் பூரிப்பும், பெருமகிழ்ச்சியும் அடைகிறது. இந்த வரலாற்றுப் பக்கங்களை பெண்கள் அறிந்திட வேண்டும் என்பதே இந்த கட்டுரையின் நோக்கமாகும்.

இன்னும் இந்த வரலாறு பற்றி மேலும் அறிந்து கொள்ள ஆர்வமுள்ள இருபால் இளைஞர்கள் இருப்பார்களேயானால், அவர்கள் பாரதிதாசன் பாடல்கள் அடங்கிய புத்தகத்தின் 81ம் பக்கத்திலிருந்து படியுங்கள் புதிய வெளிச்சம் உங்களுக்குத் தென்படும். (பாரதிதாசன் பாடல்கள் பக்கம் 79 தொகுப்பு டாக்டர் தொ.பரமசிவன்)

பெண்கள் எல்லாத் துறைகளிலும் ஆண்களுக்கு நிகரான சமஉரிமை பெற்றவர்கள் என்பதை சித்தாந்த அடிப் படையிலும், சட்ட அடிப்படையிலும் உறுதி செய்த இயக்கம் "திராவிட இயக்கம்". ஆம்! திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதை இன்றைய மகளிர் சமூகம் வரலாற்றை திரும்பிப் பார்த்து விழிப்புணர்ச்சி பெற வேண்டும். இதுமட்டுமல்ல, இனியும் பெண்களின் உரிமைக்காகவும், பாதுகாப்பிற்காகவும் தொய்வின்றி தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கும் பெண்கள் பாதுகாப்பு இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை விழிப்புள்ள பெண் இனம் நினைவில் கொள்ள வேண்டும்.

இந்திய அரசியல் சட்டப்படி உருவாக்கப்பட்டுள்ள நாடாளுமன்றம், சட்டமன்றங்கள், உள்ளாட்சி மன்றங்கள் ஆகிய மக்கள் பிரதிநிதித்துவ மன்றங்களில் பெண்களுக்கான 33 சதவீத ஒதுக்கீடு உடனடியாக அமல்படுத்தப்பட வேண்டும் என்று தோழமை கொண்ட இயக்கங்களோடு இணைந்து தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கும் இயக்கம் "திராவிட முன்னேற்றக் கழகம்தான்". ஆனால் இந்த மசோதா நாடாளுமன்றத்திலே நிறைவேற்றப்படாமல் தடுத்துநிறுத்துகின்ற கட்சி ஒன்றிய ஆட்சியிலே உள்ள பாரதிய ஜனதா கட்சி என்பதை தமிழ்நாட்டில் உள்ள பெண்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆட்சி அதிகாரத்தை ஜனநாயகத்திலே கைப்பற்றுவது என்பது ஒரு கட்டம். அதில் மக்களின் பெரும்பான்மை எடுக்கும் முடிவே இறுதியானது.

அரசியல் வெற்றிக்காக மட்டுமே போராடுகின்ற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் இல்லை. மாறாக, தேர்தல் முடிவுகளை புறந்தள்ளிவிட்டு, மக்களின் வாழ்விற்காகவும், வளர்ச்சிக்காகவும் தொடர்ந்து தொய்வின்றி பயணம் மேற்கொள்ளும் ஒரு போராளி இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். எனவே, இருபால் இளைஞர்களும் உங்கள் உரிமைகளை தக்கவைத்துக் கொள்ளவும், எஞ்சிய உரிமைகளை ஈட்டிப்பெறவும் திராவிட முன்னேற்றக் கழகம் என்கின்ற இந்தப் போராளிகள் நிறைந்த இயக்கம் உங்களை வழிநடத்தும். உங்களோடு இணைந்து போராடும், விளைவுகளைப்பற்றி கவலைப்படாமல் உங்களுக்கு என்றும் துணைநிற்கும். இருபால் இளைஞர்களும் விழிப் புணர்வுபெற்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சித்தாந்த வழியினையும், வழிகாட்டுதலையும் பின்பற்றுங்கள். உங்கள் உரிமைகளை பாதுகாத்துக் கொள்ளுங்கள். எதிர்கால சமுதாயத்தின் வார்ப்படங்களாம் இருபால் இளைஞர்களும் தங்கள் உரிமைகளைப் பாதுகாத்திட திராவிட முன்னேற்றக் கழகத்துடன் தங்களை இணைத்துக் கொள்ள விரைந்து வாரீர்! களம் காண்போம் காப்போம் நம் உரிமைகளை!!